**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. V.NAGARAJA ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 2.16.0 HA AT SF.NO. 287/1 LEASE OVER AN EXTENT OF 2.16.0 HA (PATTA LAND) AT VENKATESHAPURAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 12.02.2025 AT 11.30 AM AT M/S. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Hosur, Krishnagiri District |
| 3 | Er. A. Jothiprakash | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.Kesav | : | The Managing Partner<br>M/s. Sumuka Blue Metals & M Sand |
| 5 | Thiru.P. Gopinath | : | EIA Consultant,<br>M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 54 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Thiru. V.Nagaraja Rough Stone Quarry, lease over an extent of 2.16.0 Ha at SF.No. 287/1, Venkateshapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to

get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority - Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinakaran" and "The New Indian Express" dated 09.01.2025 and pamphlets regarding public hearing was issued to the public of Venkateshapuram Village, Kuttalapalli Village and Menasanadoddi Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the EIA consultant, representative for the proposed project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority - Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the EIA consultant, representative for the proposed project proponent to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P. Gopinath, EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Rough Stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project.

The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Prasanth, Venkateshapuram Village:**

Thiru. Prasanth has said that there is no problem for operating this proposed quarry. The quarry management should follow proper safety guidelines. He asked them to cover the load completely with tarpaulin while transporting them from the quarry also he requested the quarry management to control the dust by sprinkling water at regular intervals on the quarry roads. Finally, he said that the quarry should be operated by abiding the norms laid down by the government, failing which he would object the quarry.

2. **Thiru. Manjunath, Venkateshapuram Village:**

Thiru. Manjunath has said that there is no problem for operating this proposed quarry. He requested to give employment to the educated youth and locals from this proposed quarry. He asked to control the speed of the quarry trucks while passing in the roads and to cover the load completely with tarpaulin while transporting them from the quarry. Finally, he requested the quarry management to operate the quarry by following the norms laid down by the government without affecting the public.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority – Tamilnadu.

Further, 4 number of petitions were received on the M/s. Thiru. V.Nagaraja Rough Stone Quarry project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, from the public and no E-mail representation was received in the O/o. District Environmental

Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, on the proposed Rough Stone quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Sub Collector**<br>**Hosur** | **District Collector**<br>**Krishnagiri** |

**தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.287/1, வெங்கடேசபுரம் கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.16.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 12.02.2025 அன்று எண். 344/1, 344/2 – இல், தீர்த்தம் மெயின் ரோடு, பேரிகை கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A. பிரியங்கா I.A.S | : | சார் ஆட்சியர், ஓசூர் (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.மு. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.அ. ஜோதி பிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு.கேசவ் | : | உரிமையாளர் தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஈக்கோடெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 54 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார்

ஆட்சியர், ஓசூர் பொதுமக்கள் மற்றும் தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினகரன் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 09.01.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், வெங்கடேசபுரம் கிராமம், குட்டலப்பள்ளி கிராமம், மெனசனதொட்டி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளர் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. P. கோபிநாத் தி/ள்.ஈக்கோடெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு

வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. பிரசாந்த், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு.பிரசாந்த் அவர்கள், இக்குவாரியை துவங்குவதில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்தார். குவாரியை முறையான பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி இயக்க வேண்டும். குவாரியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் கற்களை ஏற்றிச் செல்லும் போது தார் பாய்கள் கொண்டு முழுவதுமாக மூடி எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். குவாரியின் கனரக வாகனங்கள் சாலையில் செல்லும் போது குறிப்பிட்ட கால இடைவெளியில் தண்ணீர் தெளித்து தூசு எழும்பா வண்ணம் பராமரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இறுதியாக, அரசு வகுத்துள்ள விதிமுறைகளை பின்பற்றி குவாரியை இயக்குமாறும் இல்லாவிடில் ஆட்சேபனை தெரிவிப்போம் என்று கூறினார்.

**2. திரு.மஞ்சுநாத், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. மஞ்சுநாத் அவர்கள், இக்குவாரியை துவங்குவதில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்தார். படித்த உள்ளூர் இளைஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு இக்குவாரியில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குவாரியின் கனரக வாகனங்கள் சாலையில் செல்லும் போது வேகத்தை கட்டுப்படுத்தி இயக்க வேண்டும் என்றும், குவாரியிலிருந்து கற்களை ஏற்றிச் செல்லும் போது, தார் பாய்கள் கொண்டு முழுவதுமாக மூடி எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். பொது மக்களுக்கு பாதிப்பின்றி அரசாங்கம் வகுத்துள்ள விதிமுறைகளை பின்பற்றி குவாரியை இயக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேலும், தி/ள்.V. நாகராஜா ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 4 மனுக்கள் பெறப்பட்டுள்ளது, மின்னஞ்சல் மூலமாக எதுவும் பெறப்படவில்லை

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை,.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

21/2/2025 21/2/25 27/3/25

| | | |
|---|---|---|
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** | **சார் ஆட்சியர்** | **மாவட்ட ஆட்சியர்** |
| **தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்** | **ஓசூர்** | **கிருஷ்ணகிரி** |
| **ஓசூர்** | | |

21/2/25 A/7 A/7